## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினதும் ("அதிகாரசபை"), அதன் துணைக் கம்பனியினதும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு

அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02 இற்கு இணங்காத வகையில் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல் கணிப்பிடும் போது ரூபா 45.134 மில்லியன் நீண்ட கால முதலீட்டு வேறுபாடும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | திருத்தப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நியமத்திற்கு இணங்க நீண்ட கால முதலீட்டின் மாற்றங்கள் நிதி செயற்பாடுகளின் கீழ் இனங்காணப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 90 ஆம் பந்திக்கு இணங்கும் வகையில் 2024 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் மீள்மதிப்பீடு அமுல்படுகின்ற திகதி, சுயாதீன மதிப்பீட்டாளர்களை ஈடுபடுத்தி இருந்ததா என நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டி இருந்த போதிலும் அதிகார சபையால் அந்த தேவையான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் | 2025 ஆம் ஆண்டின் போது உரிய வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் மீள் மதிப்பீடு செய்யப்படுகின்ற சொத்துக்களுக்கு உரிய தகவல்கள் மற்றும் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு உரிய நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | பட்டிருக்கவில்லை. அவ்வாறு நியமத்தின் 92 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகார சபைக்கு சொந்தமாகக் காணப்படுகின்ற முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு எனினும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 100 ஆம் பந்திக்கு முரணாக அதிகார சபையால் சேவையில் இருந்து விலக்கப்பட்டிருந்த ஊழியர்கள், மாத்தறை தொழில் நீதிமன்றத்தில் இழப்பீடு கோரி தொடரப்பட்ட தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | தொழில் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகளுக்கு உரிய நீதிமன்றத்தில் பணம் வைப்புச் செய்யப்பட்டமையால் இது நிகழத்தக்க பொறுப்பாக இருக்கவில்லை. | நியமத்தின் பிரகாரம் அதிகார சபைக்கு எதிராக இழப்பீடு கோரி தொடரப்பட்ட வழக்கு தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் 11 (ஐ) மற்றும் 18 ஆம் பந்திக்கு முரணாக அதிகார சபையின் ரூபா 1,101.568 மில்லியன் ஆன காணி கைப்பற்றல் மற்றும் காணி அபிவிருத்தி சேவை செலவினங்களில் உள்ளடக்கப் பட்ட, விற்பனை செய்யப்பட்டுள்ள காணிகளை இனங்கண்டு அதன் கிரயம் மற்றும் தற்போதய நிலமைக்கு கொண்டு வருவதற்கு ஏற்பட்ட செலவினங்கள் உரிய சொத்துக்களில் சேர்க்கப்பட்டு இருப்புக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | காணி பயன்படுத்தப் பட்ட நோக்கங்கள் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப தீர்மானம் எடுக்கப்படுகின்றமையால் மற்றும் காணி இருப்பாக கவனத்தில் கொள்ளப்படாமையினால் காணி இழப்பீடு மற்றும் அபிவிருத்தி செலவினங்கள் இருப்பில் உள்ளடக்கப்படாமல் அபிவிருத்தி சொத்தாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த காணிகளின் இழப்பீடு மற்றும் அபிவிருத்தி செலவினங்கள் இருப்பில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் விற்பனை செய்தலுக்கு உள்ள காணிகளுக்கு உரிய கிரயத்தை இனங்கண்டு இருப்பின் கீழ் கணக்கீடு செய்து நிதிக்கூற்றுக்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பாதுகாப்பு சேவையின் உத்தியோகத்தர்கள் ஏனைய நிறுவனங்களில் பாதுகாப்பு செய்வதில் ஈடுபட்டிருந்ததன் மூலம் அதிகார சபைக்கு 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மீதி ரூபா 5.83 மில்லியன் ஆகும். இந்த தொகையில் உள்ளடக்கப்பட்ட ரூபா 2.999 மில்லியன் கம்உதாவ நிகழ்ச்சித் திட்டத்திற்காக பாதுகாப்பு சேவை வழங்கியதற்காக 1995 ஆம் ஆண்டுக்கு முன்னிருந்து கொண்டு வரப்படுகின்ற மீதியாக இருந்ததுடன் இந்த | இந்த தொகை மத்திய சுற்றாடல் அதிகார சபையில் இருந்து கிடைக்க வேண்டிய தொகையான இருந்ததுடன் மீதி உறுதிப்படுத்தல் கடிதம் கோரப்பட்டுள்ளது. அதற்காக கிடைக்கின்ற பதிலின் பிரகாரம் மிகுதி தீர்மானத்தை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | பெற வேண்டிய மீதிகளுக்கு உரிய கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க தேவையான ஏற்பாடுகளை வழங்கி கணக்கீடு செய்வதற்கும், இந்த மீதிகளை அறவிடுவதற்கும் தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மீதி நீண்டகாலம் முழுவதும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட போதும் அது தொடர்பாக எந்த ஒரு ஏற்பாடுகளும் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கல்முனை மாவட்ட அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்தின் கிரயம் ரூபா 4.554 மில்லியன் ஆக இருந்த போதும் அதன் திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா 4.666 மில்லியனாக குறிப்பிடப்பட்ட தவறை சரி செய்யாமல் அது பதிவளிக்கப்பட்ட பெறுமதியாக ரூபா 0.112 மில்லியன் மறைப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இறுதி கணக்கு அறிக்கையில் கணனியில் தயாரிக்கும் போது வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் காணப்பட்ட குறைபாடுகளின் காரணமாக தேறிய பெறுமதி மறைப் பெறுமதியாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 2025 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு சரி செய்து அதன் பிரகாரம் சொத்துக்களின் பெறுமதியை திருத்தி சரி செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 45.737 மில்லியன் ஆக இருந்த போதும் அத ரூபா 123.152 மில்லியன் ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையால் ஆண்டின் வட்டி வருமானம் ரூபா 79.415 மில்லியனால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | பெற வேண்டிய வட்டி வருமானம் 2025 ஆம் ஆண்டில் கணக்கு வைக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலையான வைப்பு வட்டி வருமானம் சரியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அதிகார சபையால் 2013 ஆம் ஆண்டின் பின்னர் இழப்பீடு செலுத்தாமல் கையேற்கப்பட்ட 746 ஏக்கர் 01 றூட் 28.95 பேர் அளவான 69 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2013 ஆம் ஆண்டின் பின்னர் இழப்பீடு செலுத்தாமல் கையேற்கப்பட்ட காணிகள் 69 ஆக இருந்ததுடன் அவற்றின் அளவு 746 ஏக்கர் 01 றூட் 28.95 பேர்ச் ஆன செயற்திட்டம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணிக்காக நபர்கள் மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு இடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு உரிமை கையளிக்கப்பட்டுள்ளது. வீடமைப்பு திட்டத்திற்காக காணி பயன்படுத்துகின்ற சந்தர்ப்பத்தில் மதிப்பீடு மேற்கொள்ளப் பட்டுள்ளது. | உரிய காணி நியாயமான பெறுமதியில் மதிப்பீடு செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை ரூபா மில்லியன் | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | செலுத்த வேண்டிய கணக்குகள் (திறைசேரிக்கு) | 610.269 | மீதி உறுதிப்படுத்தல் | வீடுகளை திணைக்களம் பூர்த்தி செய்து வீடமைப்பு அதிகார சபை ஸ்தாபிக்கும் போது புத்தகப் பெறுமதியில் கையளிக்கப்பட்டிருந்தது. திறைசேரியில் இருந்து தீர்த்து வைத்தல் தொடர்பாக விசாரணை செய்யப்பட்டுள்ளதுடன் இதுவரை பதிலளிக்கப்படவில்லை. | மீதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, தீர்த்து வைப்பதற்கும் தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | செலுத்த வேண்டிய கணக்குகள் (கால்நடை வள அபிவிருத்தி திணைக்களத்திற்கு) | 13.316 | மீதி உறுதிப்படுத்தல் | கால்நடை அபிவிருத்தி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 13.316 மில்லியன் அனுப்ப பட்டுள்ள போதும் மீதி உறுதிப்படுத்தலுக்கு பதில் அளிக்கப்படாயினால் 2025 ஆம் ஆண்டின் வருமானத்தினை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், தீர்த்து வைப்பதற்கும் தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பெற வேண்டிய கணக்குகள் (திறைசேரிக்கு) | 61.47 | மீதி உறுதிப்படுத்தல் | திறைசேரியால் 2018, 2019 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட செயற் திட்டங்களுக்காக பணம் கிடைக்கப் பெற்றதா என கவனத்தில் கொண்டு உள்ளக மூலங்களில் இருந்து நிதி செலவிடப்பட்டிருந்தது. இந்த பணத்தை மீண்டும் பொதுத் திறைசேரியில் இருந்து இதுவரை கிடைக்காது இருந்தமையால் 2025 ஆம் ஆண்டின் போது முன்னைய ஆண்டின் இலாபத்தில் சீராக்கப்பட்டுள்ளது. | மீதியை மீண்டும் அறவிட்டுக் கொள்வதற்கு முடியாது இருந்தமைக்கான நியாமான உறுதிப்படுத்தலை பெற்றுக் கொண்ட பின்னர் முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப் படல் வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விளம்பர செலவினம் உரிய நிறுவனத்துடன் ஏற்படுத்திக் | அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் இருந்து | பெற வேண்டிய பணத்தை விரைவாக |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டு உடன்படிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டி இருந்ததுடன் அவ்வாறு இல்லையாயின் அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் செவன மத்திய அலகு அவ்வாறு முறையாக நடவடிக்கை எடுக்காமையின் அடிப்படையில் மத்திய அலகின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விளம்பர நடவடிக்கைகளுக்காக 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 23.681 மில்லியன் மீதி அரச மற்றும் தனியார் துறையில் 13 நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டிய 05 வருடங்களை விஞ்சிய பெறுமதி ரூபா 17.225 மில்லியன் ஆகும். இந்த பெறுமதியில் 23 வருடங்கள் வரையான மீதியும் உள்ளடங்கி இருந்தது. | கிடைக்க வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் நிலுவை பணம் காணப்படுகின்ற நிறுவனங்களுக்கு சென்று உயர் முகாமைத்துவத்துடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுகின்றது. | அறவிடுவதற்கும், முறையான நடவடிக்கைக்காக உத்தியோகத்தர்களுக்கு எதிராக தாபன விதிக் கோவையின் II பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பந்தியின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1988 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை 33 ஒப்பந்த செயற்திட்டங்களுக்காக அதிகார சபையால் ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 208.466 மில்லியன் முற்பணத் தொகையில் ரூபா 147.341 மில்லியன் 2 – 3 வருடங்களுக்கு இடையிலான காலத்தில் இருந்தும் ரூபா 57.687 மில்லியன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த முற்பணத் தொகையில் ரூபா 110.52 மில்லியன் தொகை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தில் இருந்து அறவிட வேண்டி இருந்ததுடன் எஞ்சியிருந்த மிகுதி ஏனைய நிறுவனங்களில் இருந்து அறவிட வேண்டி இருந்தது. இந்த பணத்தை அறவிடல் தொடர்பாக வரிசை அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதான நிதி உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் தலைமையில் கலந்துரையாடல் நடாத்தப்பட்டதுடன் 2025 ஆம் ஆண்டின் போது இந்த பணத்தை தீர்த்து வைப்பதற்கு முடியுமாக இருந்தது. | கடன் மற்றும் முற்பண தொகைகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கும், குறித்துரைத்த காலத்தில் கடன் மற்றும் முற்பணத் தொகைகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக தாபன விதிக் கோவையின் II பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பந்தியின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அதிகார சபையால் 2011 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் வீடமைப்பு தொகுதியை திருத்துதல், நீர் செயற்திட்டம் மற்றும் பாலம் நிர்மாணம் போன்ற 42 செயற்திட்டங்களுக்காக ரூபா 261.85 மில்லியன் முற்பணம் வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டு 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்து இருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த | இந்த முற்பணத் தொகைகளில் ரூபா 254.36 மில்லியன் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தில் இருந்தும், ரூபா 11.99 மில்லியன் தேசிய இயந்திர உபகரண நிறுவனத்தில் இருந்தும் அறவிட வேண்டி இருந்தது. தேசிய இயந்திர உபகரண நிறுவனத்தில் இருந்தும் அறவிட வேண்டிய ரூபா 5.3 மில்லியன் தொகை 2025 ஆம் ஆண்டின் போது திர்த்து வைக்கப்பட்டுள்ளது. | கடன் மற்றும் முற்பண தொகைகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கும், குறித்துரைத்த காலத்தில் கடன் மற்றும் முற்பணத் தொகைகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக தாபன விதிக் கோவையின் II பகுதியின் XLVIII |

| | | | |
|---|---|---|---|
| | தொகையில் ரூபா 254.361 மில்லியன் அதாவது 98 சதவீதம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த முற்பணத் தொகையாகும். | அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தில் இருந்து அறவிட வேண்டிய தொகை மற்றும் இயந்திர உபகரண நிறுவனத்தில் இருந்தும் அறவிட வேண்டிய தொகை தொடர்பாக எமது வரிசை அமைச்சின் செயலாளர் மற்றும் பிரதான நிதி உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் தலைமையில் சில கலந்துரையாடல்களும் நடாத்தப்பட்டுள்ளது. | அத்தியாயத்தின் 29 ஆம் பந்தியின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு இணைந்ததாக காணப்படுகின்ற தேசிய இயந்திர உபகரண நிறுவனம் 2012 சனவரி 01 ஆந் திகதியின் பின்னர் அது அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் இணைக்கப்பட்டிருந்ததுடன் அதிகார சபைக்கு இணைந்ததாக காணப்படுகின்ற கால எல்லையின் போது அதிகார சபையால் அவ்வப்போது வழங்கப்பட்டிருந்த முற்பணம் மற்றும் கடன்களின் கூட்டுமொத்தம் ரூபா 230.807 மில்லியன் தொகை 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அதிகார சபைக்கு அறவிட வேண்டி இருந்தது. 2004 ஆம் ஆண்டு முன்னிருந்து கொண்டு வரப்படுகின்ற ரூபா 10.365 மில்லியன் மீதியும் அதில் உள்ளடங்கி இருந்தது. இந்த மீதியை அறவிடுவதற்கு முடியாமல் நீண்ட காலம் முதல் கணக்குகளில் பெற வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்தது. | தேசிய இயந்திர உபகரண நிறுவனம் எமது அதிகார சபையின் கீழ் காணப்படுகின்ற கால பகுதியில் 2012 ஆம் ஆண்டு முதல் அவ்வப்போது வழங்கப்பட்டிருந்த கடன் தொகை மற்றும் அவர்கள் எமது அதிகார சபையின் டின் இலக்கத்தின் கீழ் காணப்பட்டமையால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட வரி தொகையாக ரூபா 230.807 மில்லியன் தொகை இந்த நிதியதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்தை மூடுவதற்கு பரிந்துரை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் பொதுத் திறைசேரியில் இருந்தும் இந்த பணத்தை எமது அதிகார சபைக்கு வழங்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் தற்போது அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய இயந்திர உபகரண நிறுவனங்களில் இருந்து எமது அதிகார சபைக்கு அறவிட வேண்டிய நிதி தொடர்பாக எமது வரிசை அமைச்சின் தலைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலிலும் இந்த நிதி தொடர்பான விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கடன் மற்றும் முற்பண தொகைகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கும், குறித்துரைத்த காலத்தில் கடன் மற்றும் முற்பணத் தொகைகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக தாபன விதிக் கோவையின் II பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பந்தியின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | நானாவித முற்பணமாக நடைமுறைச் சொத்தில் ரூபா 04 மில்லியன் காணப்பட்டதுடன் அதில் ரூபா 3.952 மில்லியன் அம்பாந்தோட்டை மாவட்ட | அம்பாந்தோட்ட மாவட்ட அலுவலகத்தின் மூலம் 2016 – 2019 காலப் பகுதியின் போது சோபித்தகம நீர்த்தாங்கி | முற்பண தொகைகளை விரைவாக தீர்த்து வைப்பதற்கும் அங்கீகாரம் இன்றி |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலகம் மூலம் 2016 – 2019 வருடங்களுக்கு இடையிலான காலத்தில் பல்வேறு அபிவிருத்தி பணிகளுக்காக வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த முற்பணத் தொகையில் சோபித்த நாஹினி கிராமம், நீர்த் தாங்கி நிர்மாணத்திற்காக "ஓய்வூதியதாரர்களின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் பிரதேச செயலக பிரிவு சங்கம்" இற்கு முறையான அங்கீகாரம் இன்றி வழங்கப்பட்ட ரூபா 1.250 மில்லியன் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அந்த தொகையையும் தீர்த்து வைப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | நிர்மாணத்திற்காக அரச ஓய்வூதியதாரர்களின் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் பிரதேச செயலகப் பிரிவு சங்கத்திற்கு முற்பணமாக உரிய ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இந்த நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்கு வழங்கப்பட்டிருந்த முற்பணம் தீர்த்து வைக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | வழங்கப்பட்ட கடன் மற்றும் முற்பணத் தொகை தொடர்பாக விசேட கவனம் செலுத்தி தாபன விதிக் கோவையின் II பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பந்தியின் பிரகாரம் உரிய உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் தாமதமின்றி மேற்கொள்ளப்படல் வேண்டும் |
| (ஊ) | அம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகத்தால் 2019 – 2021 வருடத்திற்கு இடையிலான காலத்தில் வ/ப இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் இருந்து ரூபா 71.224 மில்லியன் செலவில் சீமெந்து, ஓடு போன்றவை கொள்வனவு செய்து வீடமைப்பு திட்டங்களின் கடன் நலனாளிகளுக்கு வழங்கப் பட்டிருந்ததுடன் கடன் நலனாளிகள் இதன் தவணையாக தீர்க்க வேண்டி இருந்த போதும் இதனை தவணையாக தீர்க்க வேண்டியிருந்த போதும் பெற வேண்டிய ரூபா 71.224 மில்லியனுக்காக 2024 ஆம் ஆண்டின் போது எந்த ஒரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டில் கணக்குகளில் வ/ப இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்ட தொகை கடன்பட்டோரில் சீராக்கி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை மற்றும் தவணைப் பணமாக அறவிட வேண்டிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக தாபன விதிக் கோவையின் II பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பந்தியின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 52.514 மில்லியனும், நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மீதி ரூபா 104.357 மில்லியனும் 22 வருடங்கள் முதல் 40 வருடங்கள் வரையிலான காலம் முதல் அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தகவல்களின் பிரகாரம் தேசிய வீடமைப்பு அதிகார சபையில் இருந்து ரூபா 40.86 மில்லியன் கிடைக்க வேண்டிய மீதி ஒன்று மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு இடையே செலுத்த வேண்டிய மற்றும் பெற வேண்டிய மீதிகளைத் தீர்த்து வைப்பதற்காக அமைச்சின் செயலாளர் தலைமையில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுகின்றது. | செலுத்த வேண்டிய மற்றும் பெற வேண்டிய கணக்கு மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கும் கணக்குகளுக்கு இடையில் காணப்படுகின்ற இணக்கமின்மைகளைப் பரீட்சித்து நிதிக்கூற்றுக்களில் சரி செய்வதற்கும் தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1950 மார்ச் 09 ஆந் திகதிய காணி கைப்பற்றல் சட்டத்தின் 44 ஆம் பிரிவு | அதிகார சபையால் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம் சான்றுதழ் மூலம் கையேற்கப்படக் கூடிய 50 காணிக் கூறுகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு உரிய 44 காணிக் கூறுகள் கையேற்க வேண்டி இருந்த போதிலும் அந்த கையேற்றல் நடவடிக்கைகள் கணக்காய்வுத் திகதி வரையிலும் முடிவடைந்து இருக்க வில்லை. | மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு சொந்தமான 06 காணிகள் மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவிற்குச் சொந்தமான 10 காணிகள் என்பவற்றைக் கையேற்பதற்காக நிதி செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் உரிய உரித்து உறுதியை வழங்குமாறு அறிவிக்கப்பட்ட போதும் இதுவரை அந்த காணிகளுக்கு உரிய உரித்து உறுதி அதிகார சபைக்கு விநியோகிக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு உரிய 28 காணிகளை மதிப்பீடு செய்வதற்கும் இதுவரை தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு அனுப்பப்பட்டிருக்க வில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் முறைமை மீளாய்வு செய்யும் போது காணியை கையேற்பதற்கும் புறக்கணிப்புக்கள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு வழிப்படுத்தி எழுத்து ஆலோசனை விநியோகித்து மேற்பார்வை செய்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 105(4) | நட்ட இழப்பு தொடர்பாக பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரிடம் இருந்து அல்லது உத்தியோகத்தரிடம் இருந்து நட்டத்தை அறவிடுவதற்கு மேலதிகமாக அந்த அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக உரிய அதிகார தரப்பினரால் தேவையான நடவடிக்கைகள் தாபன விதிக் கோவையின் கீழ் ஒழுங்கு முறையாக தனித்தனியாக மேற்கொள்ள வேண்டி இருந்த போதிலும் 2016 | இந்த 34 ஊழியர்கள் தொடர்பாகவும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தாபன விதிக் கோவையின் II பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 21 ஆம் பந்தியின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் குறித்துரைத்த காலத்தில் மேற்கொள்ளும் போது புதிய தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆம் ஆண்டு முதல் 2025 யூலை வரையான காலத்தில் அதிகார சபையின் 34 ஊழியர்கள் தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகள் அதிகார சபையால் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2014 நவம்பர் 12 ஆந் திகதிய இலக்கம் 25/2014 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை | அரசாங்க சேவை, மாகாண அரச சேவை, அரச கூட்டுத்தாபன சபைகளுக்காக தற்காலிக, அமைய, பதிலீட்டு, ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை சேர்ப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் மற்றும் உரிய ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் சேர்க்க முடியுமாக இருந்த போதிலும் அதிகார சபையினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் ஒப்பந்த அடிப்படையில் 1486 ஊழியர்கள் சேர்க்கப்பட்டமையால் DMS/Policy/Recruitments மற்றும் 2019 நவம்பர் 20 ஆந் திகதிய திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் அந்த ஊழியர்களின் சேவை நிறுத்தப்பட்டிருந்தது. உரிய ஊழியர்களால் தொழில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரந்ததன் காரணமாக 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை 256 ஊழியர்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்காக அந்த நீதிமன்றங்களில் | 2025 சனவரி 01 ஆம் திகதி முதல் முறையான திட்டம் ஒன்று பின்பற்றாமல் மீண்டும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வில்லை. பணிப்பாளர் சபை பத்திரத்தின் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி 2020 சனவரி 13 ஆந் திகதி வரையிலும் ஒப்பந்தகாலம் முடிவடைந்துள்ள ஊழியர் தரப்பினர் ஊழியர் சேவை அத்திகதியில் இருந்தும் அதன் பின்னர் நாளாந்த ஒப்பந்த காலம் முடிவடையுமாயின் அத் திகதியில் இருந்து சேவையை முடிவுறுத்துவதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி ஒப்பந்த அடிப்படையில் இருக்கின்ற ஊழியர்களால் ஒப்பந்த காலம் முடிவடைவடைவதன் அடிப்படையில் சேவையில் இருந்து விலகிச் செல்ல வேண்டி இருந்தது. இந்த ஊழியர் தரப்பினரில் 910 பேர்கள் தொழில் நியம சபையில் வழக்கு தொடர்ந்து இருந்தனர். இதற்காக பணிப்பாளர் சபைத் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி ஊழியர்கள் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக தாபன விதிக் கோவையின் II பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பந்தியின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல் தாமதம் இன்றி மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வைப்புச் செய்யப்பட்ட தொகை ரூபா 85 மில்லியனாக இருந்ததுடன் அந்த வழக்கு நடவடிக்கைகளுக்காக வெளிவாரி சட்டத்தரணிகள் கட்டணமும் ரூபா 33.9 மில்லியன் அந்த காலப் பகுதியில் செலுத்த வேண்டி ஏற்பட்டு இருந்தது. | தீர்மானத்தின் பிரகாரம் வெளிவாரி சட்டத்தரணி உதவி பெற்றுக் கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பந்தி | நிதி ஆண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையால் 2022 ஆம் ஆண்டின் பின்னர் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 இன் வருடாந்த அறிக்கை 2025 மார்ச் 17 ஆந் திகதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. 2024 இன் வருடாந்த அறிக்கை 2025 யூன் 24 ஆந் திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதி ஆண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 870.48 மில்லியன் பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 966.57 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 96.1 மில்லியன் பற்றாக்குறையில் குறைவு ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வேறுபாட்டிற்கு வட்டி வருமானம் ரூபா 256.67 மில்லியனாலும், காணி விற்பனை வருமானம் ரூபா 96.56 மில்லியனாலும், ஏனைய வருமானம் ரூபா 150.88 மில்லியனாலும் அதிகரித்தமை மற்றும் ஏனைய செலவினம் ரூபா 273.37 மில்லியனாலும், நிதிச் செலவினம் ரூபா 110.76 மில்லியனாலும் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

| செலவினம் / வருமானம் | 2024 ரூபா | 2023 ரூபா | வேறுபாடு ரூபா | வேறுபாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| வட்டி வருமானம் | 1,484,482,324 | 1,227,808,340 | 256,673,984 | 21 |
| காணி மற்றும் வீடு விற்பனை வருமானம் | 174,466,816 | 77,905,794 | 96,561,022 | 68 |
| ஏனைய வருமானம் | 271,667,242 | 120,788,631 | 150,878,611 | 125 |
| **செலவினம்** | | | | |
| ஏனைய செலவினம் | 921,956,327 | 1,195,326,101 | 273,369,774 | 23 |
| நிதிச் செலவினம் | 110,045,090 | 220,808,087 | 110,762,997 | 50 |

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் நடைமுறை விகிதம் முறையே 2.33 : 1 மற்றும் 2.26 : 1 ஆக இருந்ததுடன் விரைவுச் சொத்து விகிதம் முறையே 2.32 : 1 மற்றும் 2.25 : 1 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் அதிகார சபையின் திரவத்தன்மை உயர் மட்டத்தில் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபைக்குச் சொந்தமான கொழும்பு 10 காலி வீதியில் அமைந்துள்ள 01 ஏக்கர் 26.5 பேர்ச் அளவான காணியில் வீடு மற்றும் வியாபார கட்டிடத் தொகுதியுடன் பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டங்களை நிர்மாணிப்பதற்காக பகிரங்க கூறுவிலை கோராமல் 2005 நவம்பர் 09 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் வெளிநாட்டு கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த அந்த கம்பனியுடன் 2006 யூன் 23 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் படி காணியின் பெறுமதி அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரின் ரூபா 650 மில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில் அறவிடுவதற்கும், 06 வருட காலத்தில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்த பின்னர் ரூபா 162 மில்லியன் இலாபம் ஒன்று அதிகார சபைக்கு வழங்குவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் கம்பனி உத்தேசிக்கப்பட்ட முதலீட்டு அபிவிருத்தி பணிகள் நிறைவேற்றாமல் 2006 ஆம் ஆண்டின் போது அதில் இருந்து விலகிச் சென்றதுடன் அந்த பணிகள் ஏனைய வேறொரு வெளிநாட்டுக் கம்பனிக்கு கையளிப்பதற்கு பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. பணம் செலுத்துவதற்கு முன்னர் இலக்கம் 983 என்ற உரித்து உறுதி மூலம் 2016 மே 05 ஆந் திகதி இந்த காணியின் உரித்து அந்த புதிய கம்பனிக்கு அதிகார சபையால் கையளிக்கப்பட்டதுடன் உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 712 மில்லியன் வெளிநாட்டுத் தொகையில் அதிகார சபைக்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும் | கம்பனியால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு இலக்கம் DLM/109/2021 என்ற வழக்கின் 2022 செப்தெம்பர் 28 ஆந் திகதிய கட்டளைக்கு எதிராக அந்தக் கம்பனி மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அந்த வழக்கின் கட்டளை 2025 மார்ச் 17 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. அந்த கட்டளையின் படி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் DLM/109/2021 வழக்கின் பிரதிவாதி பதிலை ஏற்றுக் கொண்டு முன்னைய வழக்கை விசாரணை நடாத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. மாவட்ட நீதிமன்றத்தில் இலக்கம் DLM/109/2021 என்ற வழக்கு மேற் கூறப்பட்ட மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வழக்கில் 2025 மார்ச் 17 ஆந் திகதிய கட்டளை வாசிப்பதற்காக கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்திற்காக நிறுவனங்களை தெரிவு செய்யும் போது, காணியினை கையளிக்கும் போதும் உரிய கட்டளைச் சட்டங்களுக்கு இணங்க உரிய திட்டம் முறைமை பின்பற்ற வேண்டி இருந்ததுடன் அதிகார சபைக்கு நியாயமாக நிறைவேற்றும் வகையில் வழக்கு நடவடிக்கைகளுக்காக தோற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் சட்ட விதி கட்டளைகளுக்கு இணங்காத வகையில் நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக தாபன விதிக் கோவையின் II பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அதற்கு முரணாக கம்பனி காணியின் கூறு இலக்கம் 2, 3 மற்றும் 4 என்ற பகுதிகளை தனியார் வங்கியில் அடகு வைத்து பெறப்பட்ட ரூபா 800 மில்லியன் தொகையில் 2016 ஆம் ஆண்டின் போது மூன்று காசோலைகள் மூலம் உள்நாட்டுப் பணத்தில் ரூபா 712 மில்லியன் அதிகார சபைக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் 2006 ஆம் ஆண்டின் போது இது தொடர்பாக ரூபா 100 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் கணக்காய்வுத் திகதி வரையிலும் இந்த கம்பனியால் உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. இதனிடையே கம்பனியால் இன்னுமொரு மூன்றாவது கம்பனிக்க 2017 ஆம் ஆண்டின் போது இந்தக் காணியில் இலக்கம் 05 பகுதி உரித்து உறுதி மூலம் விற்பனை செய்யப்பட்டதுடன் அந்த கம்பனியால் அந்த உரித்து உறுதி மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்டு ரூபா 950 மில்லியன் கடன் தொகை பெறப்பட்டு இருந்தது. கம்பனியால் அந்த விற்பனை உரித்து உறுதி இரத்துச் செய்யப்பட்டதுடன் அந்த மூன்றாவது கம்பனி அதிகார சபைக்கு எதிராக 03 வழக்குகள் மேல் நீதிமன்றத்திலும் மாவட்ட நீதிமன்றத்திலும் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் தொடரப்பட்டிருந்ததுடன் வழக்கு தீர்ப்பை வழங்கும் வரை காணியின் உரித்து அதிகார சபையினால் அந்த மூன்றாவது கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த மேற்கூறப்பட்ட விடயங்களின் படி அதிகார சபை சட்டத்தின் அதிகாரங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்காது இருந்தமையும் அதிகார சபையுடன் உடன்படிக்கை செய்த தரப்பினர் பக்க சார்பாக தமது பணிகளை நிறைவேற்றி இருந்தமையும் மேலும் அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஜனசெவன தேசிய வீடமைப்பு மற்றும் மக்கள் குடியிருக்க அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரச, தனியார் துறைகள் ஒன்றிணைந்து கவி ரத்ண ரெசிடன்சிஸ் வீடமைப்பு திட்டம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி | கவி ரத்ண ரெசிடன்சிஸ் வீடமைப்பு திட்டம் அமைச்சரவைப் பத்திர இலக்கம் 13/0463/517/010 இன் பிரகாரம் அரச மற்றும் தனியார் துறைகள் ஒன்றிணைந்து மேற்கொள்கின்ற செயற்திட்டத்திற்காக | செயற்திட்டத்தை திட்டமிடல், முதலீட்டாளர்களை தெரிவு செய்தல் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | அதிகார சபை மற்றும் அபிவிருத்தி தாரரான தனியார் கம்பனியுடன் ஒன்றிணைந்து 28 வீடுகளை உடைய மாடி வீட்டு தொகுதிகளை நிர்மாணிப்பதற்காக 2013 யூலை 02 ஆம் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.<br>பெறுகைகள் வழிகாட்டிக் கோவைக்கு முரணாக மலேசியாவில் நிர்மாணக் கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட அறிக்கைகளின் பிரகாரம் அந்த கம்பனிக்கு நிர்மாண நடவடிக்கைகள் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த கம்பனியில் எதிர்பார்க்கப்பட்ட தொழில் நுட்ப வழங்குல் உரிய வீடமைப்புத் திட்டத்தின் தன்மை மற்றும் அதன் அபிவிருத்தி தரரால் அதற்கு முன்னர் மற்றும் சமமான நிர்மானங்களை மேற்கொண்ட அபிவிருத்தி வீடமைப்புத் தொகை தொடர்பாக உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறு உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் உடன்படிக்கை கைச்சாத்து இட்டு 03 மாதங்களுக்கு நிர்மாணத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்க வேண்டி இருந்த போதிலும் உரிய கம்பனி நிர்மாண வேலைகளை ஆரம்பிக்காமையினால் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. உரிய ஆய்வுகளுடன் வீடமைப்புத் திட்டத்திற்காக காணி மற்றும் முதலீட்டாளரை தெரிவு செய்யாமையின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அதிகார சபைக்கு முடியாது இருந்தது. | அபிவிருத்தியாளர்களின் விருப்பத்தைக் கோருவதன் மூலம் தெரிவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டின் போது கவி ரத்ண ரெசிடன்சிஸ் வீடமைப்பு திட்டத்தை அமுல்படுத்துவதற்காக விருப்பங்கள் கோரப்பட்டிருந்தது.<br><br>விருப்பங்களை கோரியதன் பின்னர் அபிவிருத்திதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட முன்மொழிவு வரிசை அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிலையான செயற்திட்ட மதிப்பீட்டு குழுவிற்கு அனுப்பப்பட்டிருந்தது. குழுவின் தீர்மானம் மற்றும் SCARC (Standing Cabinet Appointed Review Committee) குழுவின் ஆய்வின் பின்னர் உரிய தனியார் கம்பனி தெரிவு செய்யப்பட்டதுடன் அந்த குழுவின் மூலம் அமைச்சரவை அங்கீகாரதிற்கு அனுப்பபபட்டிருந்தது.<br>அமைச்சரவை அங்கீகாரத்தின் படி செயற்திட்டம் அந்த நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டது.<br><br>இந்த செயற்திட்டத்திற்காக அந்த காணிக்கு நிகழ்கின்ற வீதி 15 அடி அகலமான நெருங்கிய மற்றும வளைவுடன் உள்ள வீதியாக இருந்ததுடன் அதில் நீளப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கும், கொங்கிரீட் கலவை இயந்திர உபகரணங்களை எடுத்துச் செல்வதற்கும் போதியளவான இல்லாது இருந்தமையால் இவ்வாறான மாடி வீட்டு செயற்திட்டத்தை அமுல்படுத்துதல் அதிக வசதியீனத்திற்கு உட்பட்டு இருந்தது. இந்த காணி தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு சொந்தமாகக் காணப்படுகின்றமையால் அதிகார சபை அடிப்படையில் நட்டம் ஒன்று ஏற்பட்டு இருந்தது. | செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு உரிய களத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகளை முறையாக மீளாய்வு செய்து அதற்காக சட்டங்கள், விதிகள் மற்றும் ஆலோசனை எழுத்து மூலம் விநியோகித்து மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். |
| (இ) | அதிகார சபைக்குச் சொந்தமான நாவல பறங்கியா கும்புர இல் 05 ஏக்கர் 10 பேர்ச் காணி வீடமைப்பு கட்டிடத் தொகுதியை | பறங்கியா கும்புர காணி எக்கோ ஹோம்ஸ் கம்பனிக்கு வழங்கி அதிகார சபையால் மீண்டும் கையேற்கப்பட்ட அந்தக் | செயற்திட்டத்திற்காக நிறுவனத்தை தெரிவு செய்யும் போது மற்றும் காணி அகற்றும் போது |

நிர்மாணிப்பதற்காக அமைச்சரவையினால் வழங்கப்பட்டுள்ள தீர்மானத்தின் பிரகாரம் தனியார் கம்பனி ஒன்றுக்கு நிபந்தனையுடன் சின்னக்கரை உரித்து உறுதியின் மூலம் 2003 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் மதிப்பீடான ரூபா 75 மில்லியன் தொகையில் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2004 ஆம் ஆண்டின் போது 2003 ஆம் ஆண்டின் மதிப்பீட்டுப் பெறுமதியில் காணி கையளிக்கப்பட்டதன் காரணமாக அதிகார சபைக்கு இழக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் ரூபா 46.5 மில்லியன் ஆக இருந்தது. எனினும் கம்பனியால் கையளிக்கப்பட்ட காணியின் 29.44 பேர்ச் ரூபா 196.5 மில்லியனுக்கு வேறொரு கம்பனிக்கு 2006 ஆம் ஆண்டின் போது விற்பனை செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு கம்பனியால் எஞ்சியுள்ள காணி செலான் வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு ரூபா 697.5 மில்லியனும் பெறப்பட்டிருந்தது. 1979 இன் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்தின் 8(1) பிரிவின் கீழ் 2020 யூன் 26 ஆந் திகதி அதிகார சபையால் உரித்து உறுதி இரத்துச் செய்யப்பட்டுடன் கம்பனி அதற்கு எதிராக வழக்கு தொடர்ந்து இருந்தது. அவ்வாறே இன்னுமொரு நபரினாலும் மேற்கூறப்பட்ட காணி தமக்கு சொந்தமான தனியார் காணியாக உரித்தைப் பெற்றுக் கொள்வதற்கு மாவட்ட நீதிமன்றத்தில் மேலும் ஒரு வழக்கு தொடர்ப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதிகார சபையினால் செயற்திட்டத்திற்காக காணி வழங்கும் போது உரிய பிரகாரம் பெறுகை திட்ட முறைமையை பின்பற்றப்படாமை, தேவையான நிபந்தனைகள் உள்ளடக்கி சரியான உடன்படிக்கை தயாரிக்காமை மற்றும் உரிய சரியான மேற்பார்வை உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

காணியில் எக்கோ ஹோம்ஸ் கம்பனிக்கு உரிய இயந்திரப் பொறிமுறை கணிசமான அளவு ஒன்று காணப்பட்டது. எனினும் பின்புலத்தில் இந்த காணி பெறுகை நடவடிக்கையின் செயற்பாடுகளின் அடிப்படையில் செயற்திட்டத்திற்கு அல்லது வேறு ஏதாவது பணிகளுக்கு வழங்குவதற்கு முடியுமாகக் காணப்பட வில்லை. எனினும் சவீந்திர என்டபிறைசஸ் கம்பனியின் கோரிக்கையின் அடிப்படையில் அவர்களின் செயற்திட்டம் ஒன்று மண் மற்றும் உபகரணங்களை களஞ்சியப்படுத்துவதற்கு மாத்திரம் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்தது. எக்கோ ஹோம்ஸ் கம்பனியால் உடன்படிக்கையின் பிரகாரம் வீடமைப்புத் தொகுதியின் நிர்மாண நடவடிக்கைகள் உரிய பிரகாரம் நிறைவேற்றாமையினால் இலக்கம் 1405 என்ற உரித்து உறுதி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் இரத்துச் செய்யப்பட்டதன் காரணமாக அந்த கம்பனியால் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது.

உரிய திட்ட முறைமை பின்பற்றப்பட வேண்டி இருந்ததுடன் அதிகார சபைக்கு பாதகம் இல்லாத வகையில் நிபந்தனைகள் உள்ளடக்கி உடன்படிக்கைகளில் கைச்சாத்திடல் வேண்டும். உரிய மேற்பார்வையுடன் மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக உரிய ஆய்வு மேற்கொள்ளாத ஆய்வுடன் செயற்படாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தம்புலுகம மாதிரிக் கிராமத்தில் 57.69 பேர்ச் ஆன காணி ஒன்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் கட்டிடம் ஒன்று நிர்மாணித்து அதில் உத்தியோகபூர்வ இல்லமாக சபையின் தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதும் அதற்காக தேசிய வீடமைப்பு அதிகார சபையுடன் வாடகை உடன்படிக்கை ஒன்றில் செய்யப்படாது இருந்ததுடன் வாடகை செலுத்தப்படவும் இல்லை. | தம்புலுகம மாதிரிக் கிராமத்தில் 57.69 பேர்ச் அளவான காணி தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு தற்போது வாடகை மதிப்பீட்டுப் பெறுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு 2024 திசெம்பர் 19 ஆம் திகதி மதிப்பீட்டுத் திணைக்களத்தில் இருந்து கோரிக்கை விடப்பட்டிருந்தது. இதுவரை மதிப்பீடு வழங்கப்படவில்லை. எனினும் வேறொரு மதிப்பீட்டை பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வாடகை உடன்படிக்கையில் உள்ளடங்கி உள்ள சபையினால் அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் கட்டம் நிர்மாணித்து பயன் படுத்தப்பட்ட மொத்த காலத்திற்காகவும் வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | தம்புலுகம மாதிரிக் கிராமத்தில் 09 கடைகள் குறித்துரைத்த ரீதியில் வாடகை உடன்படிக்கை செய்யாமல் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 1982 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை அதாவது 40 வருட காலங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் சரியான மதிப்பீடு இன்றி வாடகையாக ரூபா 759,944 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் மதிப்பீட்டுத் திணைக்களத்தால் 2018 ஆம் ஆண்டில் ரூபா 60,000 வீதம் வாடகை மதிப்பீடு செய்யப்பட்ட போதும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. ஆதன முகாமைத்துவ பிரிவின் உள்ளக சுற்றறிக்கை இலக்கம் 2011 தே.க/03 இன் (இ) பிரிவின் பிரகாரம் காணியின் பெறுமதியின் அடிப்படையில் அல்லது பெறப்படுகின்ற தேறிய வருமானத்தின் அடிப்படையில் 4 சதவீதம் சேர்க்கப்பட்ட பெறுமதிகளில் இரண்டில் குறைந்த பெறுமதிக்கு ஒவ்வொரு 02 வருடங்களுக்கும் ஒரு தடவை வாடகை உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் அதன் பிரகாரமும் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | மாதாந்த வாடகை திருத்தப்பட்டு வாடகை மதிப்பீடைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கடை உரிமையாளர்களுக்கு மீண்டும் ஒரு தடவை வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்து இடுவதற்கு அறிவிக்கப்பட்ட போதும் சில கடை உரிமையாளர்கள் வேண்டும் என்றே உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் புறக்கணித்து இருந்தனர். கடைகளில் குடியிருக்கின்றவர்களை அகற்றுவதற்கு தேவையான சட்ட ரீதியான நடவடிக்கை எதிர்காலத்தில் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சரியான மதிப்பீட்டின் பின்னர் உடன்படிக்கையின் பிரகாரம் அதிகார சபையில் வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல், மதிப்பீட்டின் பின்னரும் அதற்கு இணங்க வாடகை அறவிடாமை மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் வாடகை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை போன்றவற்றில் செயற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக தாப விதிக் கோவையின் II பகுதியின் XLVIII அத்தியாயத்தின் 29 ஆம் பந்தியின் பிரகாரம் தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் மற்றும் வாடகை உடன்படிக்கையை நாளது வரையாக்கி அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | | | எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | புத்த ரக்கித்த நாஹிமி கிராமம் என்ற மாதிரிக் கிராமத்தில் 05 வீடுகளில் 05 நலனாளிகளினால் தமக்கு வழங்கப்பட்டிருந்த மொத்த கடன் தொகையும் கூட்டுமொத்தமாக ரூபா 1.068 மில்லியன் கடன் தொகை தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு நிலுவையாகக் காணப்பட்டிருந்த போது ஏனைய தரப்பினருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் முழுமையாக தமக்கு உரித்து கையளிக்கப்படாத அரசாங்கத்தின் ஆதனம் ஒன்று இன்னுமொரு தரப்பினருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அம்பாறை மாவட்டத்தில் புத்த ரக்கித்த நாஹிமி கிராமம் மாதிரிக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்ட மாதிரிக் கிராமத்திற்காக காணி வழங்கிய நிறுவனத்தில் இருந்து காணியைக் கையேற்பதன் கீழ் வீடமைப்புத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக இணக்கம் மாத்திரம் பெறப்பட்டு அமுல்படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டம் ஆகும். அதன் பிரகாரமட இந்த காணி கையளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் (பிரதேச செயலாளருக்குச் சொந்தமான காணி) கையேற்கப்பட்ட பின்னர் உரித்து நீக்கப்பட்ட காணி தொடர்பாகவும் அனுமதியற்றவர்கள் தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்க முடியும். | நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு முன் காணிகளின் உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். விற்பனை செய்யப்பட்ட அரசாங்கத்திற்கு உரிய ஆதனங்கள் தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | பொலன்னறுவை மாவட்டத்தில் 06 பிரதேச செயலகப் பிரிவில் 50 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 100 மாதிரிக் கிராமங்களை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டதுடன் அந்த கிராமங்களில் 2283 வீடுகளை நிர்மாணிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதியேற்பாட்டுத் தொகை ரூபா 1,211.750 மில்லியன் ஆகும். கணக்காய்வுத் திகதியான 2024 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 456.883 மில்லியன் தொகை மாத்திரம் விடுவிக்கப்பட்டதுடன் மேலும் செலுத்துவதற்கு உள்ள தொகை ரூபா 754.847 மில்லியன் ஆகும். 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அந்த செயற்திட்டத்தில் அநேகமானவை இடைநடுவில் நிறுத்தப்பட்டமையால் வீடுகளில் கணிசமான அளவிலான பகுதி ஒன்று மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டதுடன் 16 கிராமங்களில் மாத்திரம் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருந்தது. | பொலன்னறுவை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட மாதிரிக் கிராமங்களுக்காக 2019 ஆம் ஆண்டின் பின்னர் நிதி ரீதியான ஏற்பாடுகள் கிடைக்காமையின் காரணமாக நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படவில்லை. கடன் மற்றும் உதவிப் பணம் முழுமையாக வழங்கி நிர்மாணங்கள் பூரத்தி செய்யப்பட்ட 16 கிராமங்கள் மக்களின் உரித்து வழங்கப்பட்டதுடன் அதன் பின்னர் இதுவரை நிர்மாணங்களில் எந்த ஒரு மாற்றமோ அல்லது செயல் முன்னேற்றமோ ஏற்படவில்லை. | நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட வீடுகள் தொடர்பாக மதிப்பீடு செய்து மிகுதி பகுதிகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான கடன் தொகை திட்டத்தின் பிரகாரம் வழங்கி திட்டமிடப்பட்ட இலக்கினை அடைந்து கொள்வதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்து கடனை அறவிடும் திட்டத்தை முறைமைப்படுத்துதல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபை சட்டத்தின் பிரகாரம் மற்றும் 2012 சனவரி 01 ஆம் திகதிய ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை கோவையின் இலக்கம் 2011/ தெ.க/01 என்ற சுற்றறிக்கையின் கீழ் காணி வழங்குதல் தொடர்பான ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் 23 சந்தர்ப்பங்களின் போது காணி வழங்கப்பட்டிருந்தது. இந்த காணி வழங்குவதற்காக அதிகார சபை சட்டத்தின் 75(1) பிரிவின் பிரகாரம் மேற்கொள்ளப் படுவதாக குறிப்பிடப்பட்ட போதிலும் தனியாருக்கு மேற்கொள்ளப்படுகின்ற காணி வழங்கல்கள் அந்த பிரிவுகளுக்கு உரித்து அல்லாது இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் இந்த பிரிவு தொடர்பாக சட்டமாதிபரிடம் விசாரணை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்ட போதும் சட்டமாதிபர் அதற்குரிய கருத்தை கணக்காய்விற்கு சமர்ப்பித்து இருக்கவில்லை. | 1979 இன் 17 ஆம் இலக்க சட்டத்தின் 75(1) ஆம் பிரிவின் கீழ் சுய அதிகாரத்தை அமுல்படுத்துவதற்கும் பணிகள் மற்றும் தகைமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக சாதாரண மற்றும் விசேட ஏற்பாடுகள் அமைச்சரால் அவ்வப்போது மேற்கொள்ள முடியுமாக இருந்ததுடன் அவ்வாறான ஏற்பாடுகள் அதிகார சபையினால் அமுல்படுத்துதல் வேண்டும். இதன் கீழ் வழங்கப்பட்ட காணிகளின் எண்ணிக்கை 23 மற்றும் பெறுகை திட்டத்தின் அடிப்படையில் 42 காணி கூறுகளுடன் 65 காணிகள் வழங்கப்பட்டிருந்தது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றறிக்கை மற்றும் செயல் நடைமுறைகள் தயாரித்து அங்கீகரித்து கொள்ள வேண்டியிருந்ததுடன் அந்த சுற்றறிக்கையின் பிரகாரம் சரியாகத் தீர்மானம் எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட போதும் வேலை பூர்த்தி செய்யப்படாத ராகம லாவண்யா மற்றும் வாத்துவ சீப்றீஸ் வீடமைப்புத் திட்டத்தின் 2024 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் 55 சதவீத செயல் முன்னேற்றம் மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. வீடு விண்ணப்பித்தவர்களினால் இந்த வீடுகளுக்காக ரூபா 1,296.175 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதும் நீதிமன்றக் கட்டளையின் அடிப்படையில் ஒப்பந்தகாரர் செயற் திட்டத்தில் இருந்து விலகிச் சென்றமையால் செயற்திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு மூலப் பொருள் விலை உயர்வடைந்து சென்றதன் காரணமாக வீட்டின் விலையும் திருத்தப்பட்டிருந்தது. | மீண்டும் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சரியான திட்டத்தின் பிரகாரம் வீடமைப்புத் திட்டங்களை ஆரம்பித்து அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் இந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சகல தேர்தல் பிரிவுகளிலும் நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்காக 100 வீடுகள் வீதம் வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் மரந்தகஹமுல, வெவேகொடல்ல | செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் போது நாட்டின் பொருளாதார பண வீக்கத்தின் காரணமாக நிர்மாணப் பொருட்களின் விலைகள் அதிகளவில் உயர்வடைந்து சென்று இதன் மூலம் மதிப்பீட்டுத் | வீடமைப்புத் திட்டங்களின் உள்ளக மதிப்பீடு தொடர்பாக முழுமையான மீளாய்வு ஒன்றை தயாரித்து உரிய திட்ட முறைமை |

| | | | |
|---|---|---|---|
| | வத்தயில் 65 வீட்டு அலகுகளை நிர்மாணிக்கும் செயற்திட்ட ஒப்பந்த திட்டத்தின் கீழ் ரூபா 485 மில்லியன் கிரயத்தில் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்ட போதும் மதிப்பீட்டு தொகையை விட 50 சதவீதம் முதல் 125 சதவீதம் வரையிலான செலவினம் உயர்வடைந்து சென்ற சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறு 2022 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 10708 (16/2022) என்ற பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் படி தற்போது காணப்படுகின்ற நிர்மாணத்தை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான பாரியளவான செயற்திட்டம் ஒன்றிற்காக ரூபா 117.29 மில்லியன் செலவிடப்பட்டு கணக்காய்வுத் திகதி வரையில் வேலையில் இடைநடுவில் நிறுத்தப்பட்ட செயற்திட்டத்தை கைவிடப்பட்டதால் ஏற்பட்டிருந்த சிக்கனமற்ற செலவினம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொகையை விட செலவினங்கள் அதிகரித்து இருந்தது. இந்த செயற்திட்டம் முன் விற்பனை வீடமைப்பு திட்டமாக இருந்ததுடன் காணப்பட்ட நெருக்கடிகளின் அடிப்படையில் வீடு விண்ணப்பிக்காத, அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு முகங்கொடுத்திருந்த நிதி நெருக்கடி மற்றும் நிர்மாணங்கள் மெதுவான போக்கில் மேற்கொள்வதுடன் எதிர் பார்க்கப்பட்ட செயல் முன்னேற்றம் காணப்படாத செயற்திட்டம் நிறுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.<br><br>அவ்வாறு 2022 மார்ச் 22 ஆந் திகதி தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் பிரகாரம் நிர்மாணங்கள் நிறுத்தப்படாத செயற்திட்டம் தொடர்பாக நிர்மாணங்கள் ஆரம்பிக்காது இருக்குமாறு வழங்கப்பட்ட ஆலோசனையை கவனத்தில் கொண்டு இந்த செயற்திட்டம் நிறுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. இது வரையில் இந்த செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்காக பொருத்தமான ஒப்பந்த காரரை தெரிவு செய்து கொள்வதற்கு விரும்பம் கோருவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | ஒன்று எழுத்து மூலம் தயாரித்து அமுல்படுத்துவதற்கும், மேற்பார்வை செய்தன் மூலம் சிக்கனமற்ற செலவினங்களைக் குறைத்துக் கொள்வதற்கும் தாமதம் இன்றி நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் உரிய பிரகாரம் தீர்மானம் எடுக்காத பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மாதிரிக் கிராமங்களில் விளம்பரம் மற்றும் விழா நடவடிக்கைகளுக்காக 2015 – 2019 காலப் பகுதியில் பிரதான அலுவலகத்தால் ரூபா 304.86 மில்லியனும், மாவட்ட அலுவலகத்தால் கூட்டு மொத்தமாக ரூபா 13.17 மில்லியனும், அதற்கு மேலதிகமாக திறந்து வைக்கும் பல்வேறு பணிகளுக்காக பிரதான அலுவலகத்தால் கூட்டு மொத்தமாக ரூபா 181.90 மில்லியனும் மாவட்ட அலுவகத்தால் ரூபா 20.53 மில்லியனும் செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் வீடுகளை நிர்மாணிப்பதற்காக செலவிட முடியுமாக இருந்த ரூபா 520.46 மில்லியன் தொகை விளம்பரம் மற்றும் விழா நடவடிக்கைகளுக்காக விளைவற்ற வகையில் செலவிடப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டில் இறுதி வரையில் இந்த | இதன் போது அந்த அரசாங்கத்தின் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவிக்கும் தேவையை அடிப்படையாகக் கொண்டு விளம்பர நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்துவதற்காக அமைச்சு மட்டத்தில் தேவையான ஆலோசனை மற்றும் தீர்மானங்கள் வழங்கப்பட்டிருந்தது. அதன் போது உரிய தொடர்புடைய தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்படுகின்ற விளம்பர நடவடிக்கைகளும் அதன் பிரகாரம் மேற்கொள்ளுமாறு அமைச்சு மட்டத்தில் வழங்கப்பட்ட ஆலோசனையின் அடிப்படையில் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப் பட்ட செலவினங்கள் செய்ய வேண்டி இருந்ததை அறியத் தருகின்றோம். 2015 – | வீடமைப்புத் திட்டங்களின் உள்ளக மதிப்பீடு தொடர்பாக முழுமையான மீளாய்வு ஒன்றை தயாரித்து உரிய திட்ட முறைமை ஒன்று எழுத்து மூலம் தயாரித்து அமுல்படுத்துவதற்கும், மேற்பார்வை செய்தன் மூலம் சிக்கனமற்ற செலவினங்களைக் குறைத்துக் கொள்வதற்கும் தாமதம் இன்றி நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் உரிய பிரகாரம் தீர்மானம் எடுக்காத பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | மாதிரிக் கிராம செயற்திட்டத்தின் கீழ் 25 மாவட்டங்களில் 115 ஏக்கர், 02 றூட், 20.54 பேர்ச் இல் நிர்மாணிக்கப்பட்ட 1089 வீட்டு நலனாளிகளுக்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குடியிருக்காது இருந்ததுடன் 09 வீடுகளுக்கு யானை அச்சுறுத்தல் காணப்பட்டமையும் 182 வீடுகள் ஏனைய வீடுகள் அவர்களுக்கு சொந்தமாகக் காணப்பட்டமையும் 45 வீடுகள் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக சென்றமையும் அவ்வாறு குடியிருக்காமைக்கான காரணமாகக் காண்பிக்கப் பட்டிருந்தது. அவ்வாறு 09 வீடுகள் வெளித்தரப்பினருக்கு விற்பனையும் செய்யப்பட்டிருந்தது. மாதிரிக் கிராம வீட்டு செயற்திட்டத்தின் கீழ் 64407 வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அதில் 18706 வீடுகள் நிர்மாணங்கள் வரையறுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே தொடர் வேலை வீடுகளின் எண்ணிக்கை 29585 ஆகும். | 2019 காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட திறைசேரி நிதியேற்பாட்டை பெறும் வகையில் நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | எதிராக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்காக காணி ஒன்று இல்லாத மற்றும் உயிர் வாழ்வதற்குத் தேவையான ஆகக் குறைந்த வசதிகளேனும் காணப்படாத தற்காலிக கூடாரம் மற்றும் ஓலை குடிசைகளில் நிரந்தரமற்ற வீடுகளில் குடியிருக்கின்ற குடும்பங்களுக்காக தேவையான அடிப்படை வசதிகளை உடைய வீடு ஒன்றை நிர்மாணிக்கும் நோக்கில் 2017 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட இந்திய உதவி கிராம சக்தி மாதிரி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2017/2018 என்ற 02 ஆண்டுகளில் 08 மாத காலத்தில் ஒரு மாவட்டத்தில் 24 வீடுகள் வீதம் 25 கிராமங்களில் 25 மாவட்டங்களில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக தென் மாகாண கிராம சக்தி செயற்திட்டம் கட்டம் I இன் கீழ் 600 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இந்திய அரசினால் நிதி உதவியாக கிடைக்கப் பெற்ற ரூபா 600 மில்லியன் தொகையில் ஒரு நலனாளிக்கு ரூபா 0.5 மில்லியன் வீதம் நிதி உதவி வழங்கி புதிதாக | மாதிரிக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு சமூகத்திற்கு அமுல்படுத்தப்பட்ட உதவி வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டமாக இருந்ததுடன் இந்திய அரசாங்கத்தின் நிதியேற்பாடுகளுக்கு மேலதிகமாக நலனாளிகளின் பங்களிப்பு மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதன் காரணமாக நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்ட இந்திய உதவி மாதிரி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் நிர்மாணங்கள் தாமதம் அடைவதற்கு காரணமாக இருந்தது. | தொடர் வேலை வீடுகளின் வேலைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் இலக்கினை அடைந்து கொள்வதற்கும் தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1,200 வீடுகள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நாட்டில் பரவலாக கிராம செயற்திட்டத்தின் கீழ் 2025 யூன் 30 ஆந் திகதி வரையில் ரூபா 297.44 மில்லியன் செலவில் 537 வீடுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டதுடன் தொடர் வேலைகள் வீடுகள் 63 ஆகும். அவ்வாறு தென் மாகாணத்தில் கிராம சக்தி கட்டம் I இன் கீழ் 2025 யூன் 30 ஆம் திகதி வரையில் ரூபா 234.12 மில்லியன் செலவில் 130 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டதுடன் தொடர் வேலை வீடுகள் 470 ஆகும். | | |
| (ஊ) | 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட ரூபா 600 மில்லியன் இந்திய உதவி, கிராம சக்தி மாதிரிக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2019/2020 ஆம் ஆண்டுகளின் போது வட மாகாணத்தில் 25 செயற்திட்டங்கள் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 25 செயற்திட்டங்கள் வீதம் 1,200 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் வட மாகாணத்தின் கிராம சக்தி செயற்திட்டத்தின் கீழ் 2025 யூன் 30 இல் உள்ளவாறு ரூபா 178 மில்லியன் செலவிடப்பட்டு 129 வீடுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டதுடன் தொடர் வேலை வீடுகளின் எண்ணிக்கை 471 ஆகும். அவ்வாறே தென் மாகாண கிராம சக்தி செயற்திட்டம் கட்டம் II இன் கீழ் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ரூபா 128.55 மில்லியன் செலவில் 23 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டதுடன் தொடர் வேலை வீடுகளின் எண்ணிக்கை 577 ஆகும். | இந்த செயற்திட்டத்திற்காக வறுமையில் உள்ள ஏழை மக்களை தெரிவு செய்யப்பட்டதுடன் இந்திய நிதி உதவியின் கீழ் வழங்கப்படுகின்ற உதவித் தொகை மாத்திரம் வீட்டின் வேலையை பூர்த்தி செய்வதற்காக போதியளவில் காணப்படாமையால் 550 சதுர அடி வீடு ஒன்றை பூர்த்தி செய்வதற்கான கிரயம் 17 இலட்சம் ஆக இருந்தமையால் அந்த தொடர் வேலை வீடுகளை பூர்த்தி செய்வதற்காக ஆகக் குறைந்தது ரூபா 12 இலட்சம் தொகை நலனாளிகளுக்கு வழங்குதல் வேண்டும். அதனால் இந்திய உதவித் தொகை ரூபா 10 இலட்சம் மற்றும் திறைசேரி நிதியின் மூலம் ரூபா 2 இலட்சம் தொகை வழங்கியதன் மூலம் இந்த வீடமைப்பு திட்டங்களின் வேலைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக இரு தரப்பினரும் இணக்கப்பாட்டிற்கு வந்து முன்மொழிவு ஒன்றை சமர்ப்பித்துள்ளதுடன் அதற்காக நிதியேற்பாடு கோரப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அந்த தொகை கிடைக்கின்ற பிரகாரம் செயற்திட்டத்தின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தொடர் வேலை வீடுகளின் வேலைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் இலக்கினை அடைந்து கொள்வதற்கும் தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் அமுல்படுத்தப்பட்ட கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய 05 வருடங்களை விஞ்சிய கடன் | 1984 - 1989 மற்றும் 1990 - 1992 காலப் பகுதியில் கடன் தொடர்பாக மாவட்ட அலுவலக மட்டத்தில் அறவிட முடியாத கடன் தொடர்பாக அறிக்கை ஒன்று தயாரிப்பதற்கு | கடனை விரைவாக அறவிடுவதற்கும், உரிய இலக்கினை அடைந்து கொள்வதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மீதி ரூபா 3,321.671 மில்லியன் ஆக இருந்ததுடன் இதில் 05 வருடங்களை விஞ்சிய கடன் மீதியில் 1984 – 1989 காலப் பகுதியில் அமுல்படுத்தப்பட்ட பத்து இலட்சம் வீடமைப்பு திட்டம் மற்றும் 1990 – 1992 காலப் பகுதியில் அமுல்படுத்தப்பட்ட பதினைந்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அறவிட வேண்டிய 30 வருடங்களை விஞ்சிய ரூபா 277.12 மில்லியன் மற்றும் ரூபா 188.26 மில்லியன் உள்ளடங்கி இருந்தது. அவ்வாறே ஒவ்வொரு கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழும் வழங்கப்பட்ட கடன் தொகையின் சதவீதமாக எடுக்கும் இடத்து அறவிடாமை 18 சதவீத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. 05 கடன் நிகழச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 974.915 மில்லியன் கடன் தொகையில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் எந்த ஒரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அதிகார சபையின் வீடமைப்பு கடன் அறவிடுவதல் மிகவும் நலிவான மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் வீடமைப்புக் கடன் வழங்கும் போதும் மற்றும் கடனை அறவிடும் போதும் மாவட்ட முகாமையாளரை உள்ளடக்கிய பதவியணியினர் அது தொடர்பாக விசேட கவனம் செலுத்தி செயற்பட வேண்டியிருந்த போதும் கடன் அறவிடும் நடவடிக்கைகள் அதன் பிரகாரம் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மேலும் 2015 – 2019 காலப் பகுதியில் மாதிரி கிராமங்களுக்காக ரூபா 4,279.7 மில்லியன் கடன் தொகை விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் 587 கிராமங்களில் 11980 வீடுகள் 2024 யூலை 31 ஆந் திகதி வரையிலும் திறந்து வைத்து மக்களின் உரித்துக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை கிடைத்த பின்னர் உயர் முகாமைத்துவத்திற்கு அறிக்கை இட்டு தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2025 ஆம் ஆண்டில் அறவிடக் கூடிய கடனை அறவிடுமாறு மாவட்ட அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 2015 – 2019 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட மாதிரிக் கிராம நிகழ்ச்சித் திட்டத்திற்காக திறைசேரி நிதியேற்பாட்டை பெறும் வகையில் நிகழ்ச்சித் திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(ஏ) 1984 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட செவன உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வறுமையான குடும்பங்கள், விசேட தேவை மற்றும் அதி விசேட திறன்களுடன் நபர்களை

செவன உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நலனாளிகளை தொடர்பு படுத்துதல் குறைவு ஒன்று காணப்பட்டது. நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக கட்டிடப் பொருட்களின்

உரிய பணிகளை நிறைவேற்றுவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்தி தொடர் வேலை வீடுகளின் வேலைகளை பூர்த்தி

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கிய குடும்பங்களுக்காக சலுகை வழங்கும் நோக்கில் செவன லொத்தர் விற்பனை வருமானத்தில் 10 சதவீதம் செவன நிதியத்திற்காக செலவு வைக்கப்பட்டு 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் முறையே 267 வீடுகள், 474 வீடுகள் மற்றும் 440 வீடுகளை நிர்மாணிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஒவ்வொரு ஆண்டுகளிலும் மதிப்பீடு செய்யப்பட்டு பெறப்பட்ட வீடுகளில் முறையே 47 வீடுகள், 29 வீடுகள் மற்றும் 30 வீடுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டின் இறுதியில் 90 தொடர் வேலை வீடுகள் காணப்பட்டது. தொடர் வேலை வீடுகளுக்காக ஒவ்வொரு வருடமும் நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிதியில் இருந்து உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்குப் பதிலாக ரூபா 977 மில்லியன் முதலீடு ஒன்று மீளாய்வாண்டின் இறுதியில் பேணிச் செல்லப்பட்டிருந்தது. | விலைகள் வரையறை இன்றி உயர்வடைந்து சென்றதுடன் அது மற்றும் அதற்கு சமமான ஊழிய கிரயமும் அதிகரித்துச் சென்றது. அதனால் வீடுகளை நிர்மாணிக்கும் கிரயம் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் வறுமையில் வாழும் மக்களுக்காக செவன உதவி நிகழ்ச்சித் திட்டத்தில் இருந்து வீடுகளை நிர்மாணித்தலை ஆரம்பித்தல் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் வேலைகளை பூர்த்தி செய்தல் நேரடியாக தாக்கமளித்து இருந்தது. அவ்வாறு செவன உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உதவி கோரிப் பெறுதலும் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.<br><br>இந்த வீடுகள் குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்தல் மெதுவாக ஏற்பட்டமைக்கு உரிய நலனாளிகளுக்காக வெளித்தரப்பினரில் இருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பங்களிப்பு உரிய பிரகாரம் குறித்துரைத்த காலத்தில் கிடைக்கப் பெறாமையும் மற்றும் நலனாளிகளுக்கும் உரிய பங்களிப்பு குறித்துரைத்த காலத்தில் வழங்குவதற்கு முடியாமையின் காரணமாக தாமதம் அடைந்து இருந்தது. | செய்து கொள்வதற்கும் திட்டமிடப்பட்ட இலக்கினை நிறைவேற்றுவதற்கும் தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | சகலருக்கும் வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித் திட்டம் 2022 சனவரி 01 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டு 2024 மார்ச் 31 ஆந் திகதி வரையில் வேலைகள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் இதன் கீழ் 2004 வீடுகள் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2024 யூன் 30 வரையிலும் ரூபா 1,063.05 மில்லியன் கடன் வழங்கப்பட்டிருந்த 691 வீடுகள் மாத்திரம் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதன் செயல் முன்னேற்றம் 35 சதவீதம் ஆக இருந்ததுடன் அத்திகதியில் 1313 வீட்டு அலகுகள் தொடர் வேலையாகக் காணப்பட்டது. | சகலருக்கும் வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித் திட்டம் 2022 ஆம் ஆண்டில் திறைசேரி நிதியேற்பாடுகளில் 04 வீடுகள் மற்றும் உள்ளக நிதியேற்பாடுகளில் 484 வீடுகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 483 வீடுகள் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | தொடர் வேலை வீடுகளின் வேலைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் இலக்கினை அடைந்து கொள்வதற்கும் தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையில் வீடுகள் இல்லாத, யுத்தத்தின் போது ஊனமுற்ற மற்றும் மரணமடைந்து | இந்த செயற்திட்டத்தில் இருந்து 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 1484 குடும்பங்களின் வீடுகளின் தேவை மாத்திரம் | திட்டமிடப்பட்ட இலக்கினை அடைந்து கொள்வதற்கும், அறவிட வேண்டிய பணத்தை |

| | | |
|---|---|---|
| படைவீரர்களின் குடும்பங்கள் 3650 இற்காக குடியிருப்பதற்கு பொருத்தமான வீடுகள், உதவி அடிப்படையில் வழங்குதல் நோக்காகக் கொண்டு அமுல்படுத்தப்பட்ட படைவீரர் விருசுமித்து ரோஸ் செயற்திட்டம் 2019 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த தொகை புதிய வீடுகளுக்காக ரூபா 351.89 மில்லியனும், அரைவாசி பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளுக்காக ரூபா 547.54 மில்லியனும் ஆகும். 2024 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையில் 1484 குடும்பங்களுக்கு வீடுகளின் தேவை மாத்திரம் நிறைவேற்றப்பட்டதுடன் படை வீரர்களின் குடும்பங்கள் 2166 பேரினது வீடுகளின் தேவையை பூர்த்தி செய்வதற்கு முடியாது இருந்தது. பல்வேறு காரணங்களின் அடிப்படையில் படைவீரர்கள் 25 பேர்களின் உதவிகள் நிறுத்தப்பட்டதுடன் அவர்களுக்காக செலுத்தப்பட்டவைகளை அறவிடுவதற்கு குறித்துரைத்த நிலுவைப் பணம் ரூபா 7.315 மில்லியன் ஆகும். | நிறைவேற்றி பொது திறைசேரியில் இருந்து நிதி போதியளவான பிரகாரம் விண்ணப்பிக்கப் பட்டவர்களுக்கு இடையே தகைமை பெற்ற நலனாளிகளுக்கு உதவி பணம் வழங்கப்பட்டதுடன் மிகுதியை அவர்களுக்கு ஏஞ்சியவர்களுக்கு நிதியை வழங்குவதற்கு முடியாது இருந்தது. மேலும் 2020 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட கொரோனா தொற்று நோய் மற்றும் நாட்டில் ஏற்பட்டு இருந்த ஸ்திரமற்ற நிலைமையின் காரணமாக திறைசேரியில் இருந்து பணம் ஒதுக்கப்படாமையினால் திட்டமிடப்பட்ட பிரகாரம் விண்ணப்பிக்கப்பட்ட மிகுதியான நலனாளிகளுக்கு பணத்தை வழங்குவதற்கு முடியாது இருந்தமையால் 2166 குடும்பங்களின் வீடுகளின் தேவையை பூர்த்தி செய்ய முடியாது இருந்தது. | அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையினால் உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் எண்ணங்களை விருத்தி செய்யும் வகையில் மற்றும் ஊழியர் செயற்திறன் மற்றும் வினைத்திறனை அதிகரிக்கும் வகையில் வருடாந்த பயிற்ச்சித் திட்டம் ஒன்று தயாரித்தல் வேண்டும். இதன் போது குறித்துரைத்த ஆண்டின் போது செலவிடப்பட்ட தொகையை இனங்கண்டு அந்த காலத்தில் நிறுவனத்திற்கு ஆக்க பூர்வமாக அமுல்படுத்தக் கூடிய நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கி வருடாந்த பயிற்சி திட்டங்களை தயாரிக்க வேண்டி இருந்த போதிலும் அதிகார சபையால் 2024 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்த முடியாது இருந்த பயிற்ச்சித் திட்டம் தயாரிக்கப் பட்டிருந்ததுடன் அந்த பயிற்ச்சித் திட்டத்திற்கு அந்த நிகழ்ச்சித் | 2025 ஆம் ஆண்டுக்கு உரிய பயிற்சித் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அதிகார சபைக்கு பொருத்தமான பிரகாரம் பயிற்ச்சித் திட்டத்தை தயாரித்து அமுல்படுத்தி மேற்பார்வை செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | வெளிவாரி உள்நாட்டு பயிற்சியின் கீழ் 2024 ஆம் ஆண்டின் போது 14 பிரதான விடயங்களின் கீழ் 54 நிகழ்சிசத் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதில் 02 நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பயிற்சியின் கீழ் 2024 ஆம் ஆண்டின் போது 14 பிரதான விடயங்களின் கீழ் 54 நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பயிற்ச்சிக் கிரயம் ரூபா 10 மில்லியன் ஆகும். எனினும் 2024 ஆம் ஆண்டுக்கு உரியதாக அதற்காக அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியேற்பாட்டின் அடிப்படையில் ரூபா 06 மில்லியன் மாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியேற்பாட்டுத் தொகையுடன் ஒப்பிடும் போது நிகழ்ச்சித் திட்டத்தின் எண்ணிக்கை திருத்த வேண்டி ஏற்பட்டு இருந்ததுடன் அதன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் உள்ளகப் பயிற்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 18 உம், வெளிநாட்டு பயிற்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 02 உம் இயற்கையிலான பயிற்சி நிகழ்சித் திட்டங்கள் 04 உம் ஆக 24 நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதுடன் அதற்காக செலவான தொகை ரூபா 2.610 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவு திட்ட நிதியேற்பாடான ரூபா 6 மில்லியனில் ரூபா 2.610 மில்லியன் பயிற்சி கிரயமாக செலவிடப்பட்டுள்ளது. அவ்வாறே இந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் நலன்கள் பெற்றவர்களின் எண்ணிக்கை 1271 ஆகும். | பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களை திட்டமிடல் மற்றும் அமுல்படுத்தல் முறையாக மேற்கொண்டு நிகழ்ச்சித் திட்டங்களின் செயல் முன்னேற்றத்தை கட்டி எழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |